## திராவிட மாடல் அரசின் பெரும் ஆதரவினால் –

# இந்தியாவிலும், உலகிலும் ‘செஸ்’ விளையாட்டில் சிறந்த மையமாக தமிழ்நாடு விளங்குகிறது!

## சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் – 2024 ‘செஸ் போட்டி பரிசளிப்பு விழாவில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை,நவ.12-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2024) சென்னை வேளச்சேரியில் நடைபெற்ற சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் 2024 செஸ் போட்டியின் பரிசளிப்பு விழா நிகழ்ச்சியில், மாஸ்டர்ஸ் பிரிவில் வெற்றி பெற்ற அரவிந்த் சிதம்பரம் மற்றும் சேலஞ்சர்ஸ் பிரிவில் வெற்றி பெற்ற வி.பிரணவ் ஆகியோருக்கு கேடயம் மற்றும் பரிசுத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். மேலும் இந்நிகழ்ச்சியில் கிராண்ட்மாஸ்டர் டி. குகேஷ் சிங்கப்பூரில் நடைபெறவிருக்கும் உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க பயிற்சிகள் மேற்கொள்ளவும், தயாராவதற்காகவும் ரூ.10 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.**

**இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், “திராவிட மாடல் அரசின் பெரும் ஆதரவினால், இந்தியாவிலும், உலகிலும் ‘செஸ்’ விளையாட்டில் சிறந்த மையமாக தமிழ்நாடு விளங்குகிறது!” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

இவ்விழாவில் துணை முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இந்தியாவின் முக்கிய கிளாசிக்கல் செஸ் போட்டியான ‘சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் 2024’-ன் பரிசு வழங்கும் விழாவில் இன்று உங்கள் முன் நிற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

முதலாவதாக, சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி 2024ல் வெற்றியாளராக உருவானதற்காக தமிழ்நாட்டின் அரவிந்த் சிதம்பரம் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலஞ்சர்ஸ் பிரிவில் பிரணவ் முதல் இடத்தைப் பிடித்ததற்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராண்ட் மாஸ்டர்ஸ் பிரிவில் முதல் பரிசாக ரூ. 15 லட்சமும், சேலஞ்சர்ஸ் பிரிவில் முதல் பரிசாக ரூ. 6 லட்சம் வழங்கப்படுகின்றது. இந்த தாராளமான பரிசு நிதியானது, தமிழ்நாட்டில் செஸ் விளையாட்டை ஊக்குவித்து ஆதரிப்பதில் தமிழ்நாடு அரசின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகின்றது.

இந்தப் போட்டியில் பரிசுகளைப் பெற்ற லெவோன், அர்ஜுன், அமீன், மாக்சிம், பர்ஹாம், அலெக்ஸி, விதித் சந்தோஷ் குஜ்ராத்தி, முரளி, பிரனேஷ், அபிமன்யு, ஹரிகா, வைஷாலி மற்றும் வெற்றி பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் விளையாட்டு சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியினை காண பெரும் எண்ணிக்கையிலான ரசிகர்களை ஈர்த்தது. நமது முதலமைச்சர் அவர்கள் மொத்தப் பரிசு நிதியாக சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் போட்டியில் இரண்டு பிரிவுகளுக்கும் சேர்த்து 70 லட்சம் ரூபாயை வழங்கியுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, பல்வேறு முன்னெடுப்புகளின் மூலம் விளையாட்டுத்துறையில் தமிழ்நாடு ஏராளமான சாதனைகளை தொடர்ந்து படைத்து வருகிறது. நமது முதலமைச்சரின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ், தமிழ்நாடு அரசு பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டு நிகழ்வுகளை மாநிலத்தில் வெற்றிகரமாக நடத்தி வருகிறது.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2024) சென்னை வேளச்சேரியில் நடைபெற்ற சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் 2024 செஸ் போட்டியின் பரிசளிப்பு விழா நிகழ்ச்சியில், மாஸ்டர்ஸ் பிரிவில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கேடயம் மற்றும் பரிசு தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, புகழ்பெற்ற செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்த், செஸ் வீரர் டி.குகேஷ் மற்றும் போட்டியின் ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீநாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த நவம்பர் 5-ம் தேதி முதல் இன்று வரை, இந்த Chennai Grand Masters Chess Tournament 2024 மிகச்சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றுள்ளது. அறிவாற்றல், கலாச்சாரம் மற்றும் முன்னேற்றத்தின் பூமியான நமது தமிழ்நாட்டை வரையறுக்கும் தொலைநோக்கு, அர்ப்பணிப்பு உணர்வின் பிரதிபலிப்பாகவும் இந்தப் போட்டி இருந்தது.

இந்த மதிப்புமிக்க போட்டியில் பங்கேற்றுள்ள இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைத்து வீரர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக அரங்கில் தொடர்ந்து உயர்ந்து வரும் நமது தமிழ்நாட்டின் திறமையாளர் டி.குகேஷ் அவர்களை இந்தத் தருணத்தில் நாம் அனைவரும் கைதட்டி பாராட்டுவோம். சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸின் 2023 பதிப்பில் குகேஷின் வெற்றி, 2024 கேண்டிடேட்ஸ் போட்டியில் தனது இடத்தைப் பாதுகாக்க உதவியது. SDAT இன் எலைட் விளையாட்டு வீரரான எங்களின் சொந்த கிராண்ட்மாஸ்டர் டி. குகேஷ் அவர்கள் சிங்கப்பூரில் நடைபெறவிருக்கும் FIDE உலக செஸ் சாம்பியன்ஷிப்பிற்கான பயிற்சிகளுக்காகவும் மற்றும் தயாராவதற்கும் ரூ.10 லட்சத்திற்கான காசோலையை வழங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அந்தப் போட்டியிலும் குகேஷ் வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியானது, நமது மாநிலம் மட்டுமின்றி, உலகம் முழுவதும் செஸ் விளையாட்டின் மதிப்பினை உயர்த்த தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளின் முக்கியப் பங்களிப்பாகும். நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தலைமையில், பல்வேறு திட்டங்கள் மற்றும் முயற்சிகள் மூலம் எங்கள் விளையாட்டு வீரர்களுக்கு வலுவான ஆதரவையும் ஊக்கத்தையும் அளித்துள்ளோம்.

எங்கள் முன்முயற்சிகள் எங்களது செஸ் வீரர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த வசதிகள், பயிற்சி மற்றும் நிதியுதவி கிடைப்பதை உறுதி செய்துள்ளன.

உதாரணமாக, மிஷன் இன்டர்நேஷனல் மெடல்கள் திட்டத்தின் மூலம் (MIMS), பி. இனியன், எஸ்.ரோஹித் கிருஷ்ணா மற்றும் செல்வி பி.வி. நந்திதா, போன்ற நம்பிக்கைக்குரிய வீரர்களை ஆதரித்து உதவிகள் செய்வதன் மூலம் உலக அரங்கில் போட்டியிடும் வாய்ப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே சர்வதேச அளவில் முத்திரை பதித்துள்ள ஷர்வானிகா போன்ற இளம் திறமையாளர்களுக்குப் பின்னால் நமது மாநிலம் நின்று, 10 வயதுக்குட்பட்ட, இந்தியாவில் அதிக மதிப்பு பெற்ற வீராங்கனையாக அவரை உருவாக்கியது. தமிழ்நாட்டில் 31 கிராண்ட் மாஸ்டர்களை பெற்றுள்ளோம். தொடர்ந்து சாம்பியன்களை வளர்த்து உருவாக்கி வருகின்றோம்.

ஆர். பிரக்ஞானந்தா, ஆர். வைஷாலி போன்ற செஸ் வீரர்களை மாநிலம் உருவாக்கியுள்ளது, சமீபத்தில், புடாபெஸ்டில் நடந்த 45வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில், இந்திய செஸ் அணிகள், ஆண்கள் மற்றும் பெண்கள் என இரண்டு பிரிவிலும் தங்கம் வென்றது. இந்த வரலாற்றுச் சாதனையில் நமது வீரர்களான குகேஷ், வைஷாலி, பிரக்ஞானந்தா மற்றும் கேப்டன் ஸ்ரீநாத் நாராயணன் ஆகியோர் முக்கியப் பங்காற்றியதில் தமிழ்நாடு பெருமிதம் கொள்கிறது.

அவர்களின் உயர்ந்த திறமைகளை அங்கீகரிக்கும் வகையில், நமது முதலமைச்சர் அவர்கள் மொத்த ஊக்கத்தொகையாக ரூ. 45வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழக செஸ் வீரர்களுக்கு 90 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளார்கள்.

எங்களின் அனைத்து வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் செஸ் அகாடமிகளின் கடின உழைப்பையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். இந்த வெற்றியின் மூலம் அரவிந்த் 2,718 புள்ளிகள் என்ற சாதனையை எட்டினார். உலக அளவில் இதுபோன்ற மற்ற போட்டிகளுக்கான அழைப்பிதழ்களைப் பெற இந்தத் திறன் அவருக்கு உதவும். அவரது வெற்றியை தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

மாஸ்டர்ஸ் போட்டியுடன் இணைந்து நடத்தப்பட்ட சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் சேலஞ்சர்ஸ் போட்டியையும் பாராட்ட விரும்புகிறேன். சேலஞ்சர்ஸ் போட்டியின் வெற்றியாளரான பிரணவ், அடுத்த ஆண்டு நடைபெறும் கிராண்ட் மாஸ்டர்ஸ் போட்டியில் பங்கேற்கும் பெருமையைப் பெறுவார்,

முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசின் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT), செஸ் விளையாட்டிற்கு உண்மையிலேயே தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது, கடந்த ஆண்டு ரூ.1.77 கோடியாக இருந்த பரிசுத்தொகையானது, இந்த ஆண்டு 2.61 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தியாவிலும் உலகிலும் செஸ் விளையாட்டில் சிறந்து விளங்கும் மையமாக தமிழ்நாடு இருப்பதை அரசின் ஆதரவு உறுதி செய்கிறது. நமது மாநிலத்தில் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளை நடத்துவதில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கும், தமிழ்நாடு அரசுக்கும் இடையறாது ஆதரவளித்து வரும் சதுரங்க வித்தகர் விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஊக்கம் உண்மையிலேயே விலைமதிப்பற்றது. அதேபோன்று, உலகளாவிய சதுரங்கப் போட்டிகளை இந்தப் பகுதிக்குக் கொண்டு வர உதவிய FIDE க்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, இந்தப் போட்டியைப் பார்த்து ஆதரவளிக்க முன்வந்த 3,500 பார்வையாளர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விளையாட்டின் மீதான உங்கள் ஆர்வமும் ஈடுபாடும் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. எங்கள் வீரர்களை புதிய உயரங்களை அடைய ஊக்குவிக்கிறது. மலிவு விலையில் டிக்கெட்டுகள் மற்றும் பல்வேறு செஸ் அகாடமிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு நேரடி விளையாட்டுகளைப் பார்த்து அனுபவிக்க இலவச அனுமதி வழங்கப்படுவதால், சதுரங்கத்தில் ஆர்வம் அதிகரித்து வருவதைக் காண்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

2024 சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் நிறைவின்போது, இந்தப் போட்டி வெளிப்படுத்திய விளையாட்டுத் திறன், போட்டியின் மகிழ்ச்சி மற்றும் அறிவார்ந்த திறமை ஆகியவற்றைக் கொண்டாடுவோம். இன்று நாம் இங்கு கண்ட பல வீரர்கள் சதுரங்க உலகில் இன்னும் பெரிய சாதனைகளை நிகழ்த்துவார்கள் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

மீண்டும் ஒருமுறை, அனைத்து வீரர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த வருடம் உங்களை மீண்டும் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கின்றோம் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாறு துணை முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, புகழ்பெற்ற செஸ் விளையாட்டு வீரர் விஸ்வநாதன் ஆனந்த், கிராண்ட்மாஸ்டர் டி.குகேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் வி.மணிகண்டன், சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் வெற்றியாளர் அரவிந்த் சிதம்பரம். சென்னை கிராண்ட் மாஸ்டர் சேலஞ்சர்ஸ் செஸ் போட்டியில் சேலஞ்சர் பிரிவில் வெற்றி பெற்ற வி பிரணவ், போட்டி இயக்குனர் திரு.ஸ்ரீநாத் நாராயணன், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த செஸ் வீரர்கள், செஸ் விளையாட்டு ஆர்வலர்கள், SDAT விடுதி மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## எங்கள் முதல்வர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்

# கூவத்தூரில் ஏலம்விட்டு முதல்வரை தேர்வு செய்யவில்லை!

## எடப்பாடிக்கு அமைச்சர் பி.கே. சேகர்பாபு கடும் பதிலடி!

*சென்னை,நவ.12-*

*இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு பிராட்வே பேருந்து நிலையத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து இராயபுரம் மேம்பாலம் அருகே தற்காலிகமாக அமையவுள்ள பேருந்து நிலையத்திலும் ஆய்வு செய்தார்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் பி.கே. சேகர்பாபு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு பதிலளிக்கும் போது, எங்கள் முதலமைச்சர் மக்களால் ஏகோபித்த ஆதரவுடன் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். எடப்பாடி போல் கூவத்தூரில் ஏலமிட்டு தேர்வானவர் அல்ல என காட்டமுடன் குறிப்பிட்டார்.*

*இப்பேட்டியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறியதாவது:*

*வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் அனைத்தும் 2025-ம் ஆண்டு டிசம்பருக்குள் முடிக்கப்படும். அனைத்து அடிப்படை வசதிகளுடன் ராயபுரம் புதிய பஸ் நிலையம் தற்காலிகமாக விரைவில் செயல்பாட்டுக்கு வரும். ரூ.110 கோடி செலவில் தீவுத்திடலில் ஒரு பிரமாண்ட திட்டத்தை வடிவமைத்து முதல்-அமைச்சர் அந்த திட்டப் பணிகளை தொடங்கி வைத்துள்ளார். அந்த பணிகள் தீவுத்திடலில் நடைபெறுவதால் தற்காலிகமாக ராயபுரம் மேம்பாலம் அருகே உள்ள இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதுவும் வடசென்னையின் மைய பகுதி தான். போக்குவரத்து பயணிகளுக்கு இந்த இடம் உகந்ததாக இருக்கும்.*

*சென்னை வாக்காளர்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் என்றால் இன்றைய முதல்-அமைச்சர் தான். மழை வெள்ள காலங்களில் வீட்டில் பதுங்கிக் கொண்டு இருப்பதில்லை. மக்களுக்காக மழை வருவதற்கு முன்பாக களத்தில் தரையில் தன் காலை பதிக்கின்ற முதல்வர் என்றால் நம்முடைய முதல்-அமைச்சர் தான்.*

*கடந்த காலங்களில் திட்டங்கள் என்றால் தங்களுக்கு சுயலாபம் என்னவென்று கணக்கிட்ட காலம் அது. ஆனால் இப்போது கொண்டு வரப்படும் திட்டங்களால் மக்களுக்கு என்ன பயன் என்று கணக்கிட்டு மக்களுக்காக திட்டங்களை கொண்டு வருகிறோம்.*

**மக்கள் முதல்வர்**

*கிட்டத்தட்ட 56 ஆண்டுகளுக்கு மேல் பொதுவாழ்வில் இருக்கிறார் நம்முடைய முதல்-அமைச்சர். கொடுஞ்சிறை மிசாவை சந்தித்தார், பல்வேறு அடக்குமுறைகளை எதிர்கொண்டவர், இதுவரை 18 முறைகளுக்கு மேல் சிறை சென்றுள்ளார், ஆனால் ஒரு முறைகூட ஊழல் வழக்குக்காக சிறை சென்றதில்லை. மக்கள் நலனுக்காக மக்களுக்காக களத்தில் நின்று போராடி சிறைக்கு சென்றவர். தமிழ்நாட்டின் பொக்கிஷம் நம்முடைய முதல்-அமைச்சர். தீர்க்க தரிசனத்திற்கு ஒரு முதல்வர் உண்டு என்றால் தமிழ்நாடு முதல்-அமைச்சர் தான்.*

*தன்னுடைய ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஊர்ந்து வந்து முதல்-அமைச்சர் பதவியை அனுபவித்தவர் நம்முடைய முதல்வர் இல்லை. 2021 தேர்தலில் மக்களை சந்தித்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்- அமைச்சர் நம்முடைய முதல்-அமைச்சர்.*

**கூவத்தூரில் ஏலம்**

*கூவத்தூரில் ஏலம் விடப்பட்டு ஏலத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்- அமைச்சர் எங்களுடைய முதலமைச்சர் கிடையாது. மேலும் இது போன்ற விமர்சனங்களை முன்வைக்க வந்தால் எந்த விவாதத்திற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.*

*பல்வேறு நாடுகளில் கூட தற்போது தமிழ்நாட்டில் செயல்படுத்தக்கூடிய திட்டங்களை செயல்படுத்தி அந்த நாட்டு மக்களின் நன்மதிப்பை பெற்று வருகிறார்கள். அந்த அளவிற்கு திட்டங்களை தீட்டக்கூடிய முதல்வராக நம்முடைய முதல்-அமைச்சர் உள்ளார். மக்கள் நலன் காக்கும் முதல்வராக இருக்கிறார்.*

*இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறினார்.*



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (11.11.2024) சென்னை, பிராட்வேயில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்தில் ரூ.822.70 கோடி மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம் மற்றும் குறளகம் கட்டப்படவுள்ள இடத்தினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---

## பள்ளிக்கல்வித்துறை - மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தியும்

# ஒன்றிய அரசு இதுவரை நிதி ஒதுக்காதது கவலை அளிக்கிறது!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, நவ. 12-

‘மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தியும் பள்ளிக் கல்வித் துறைக்கான நிதியை ஒன்றிய அரசு இதுவரை ஒதுக்காதது கவலை அளிக்கிறது’ என ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

இதுகுறித்து 11.11.2024 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

மாநில அரசின் நிதியில் இருந்து செப்டம்பர் மாதத்துக்கான சம்பளம் வழங்கப்படும் என அன்பில்மகேஷ் அறிவித்தார்.

பொதுவாக தமிழக அரசு ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் கடைசி நாளிலேயே சம்பளம் அவர்களின் வங்கிக்கணக்குகளில் போய் சேர்ந்துவிடும். மாதம் பிறந்தால்தான் சம்பளம் என்பது அவர்களுக்கு கிடையாது. ஆனால், சமக்ர சிக்சா அபியான் அதாவது, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின்கீழ் பணியாற்றும் 15 ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாதவர்களையும் சேர்த்து 32,500 பேருக்கு கடந்த செப்டம்பர் மாதத்துக்கான சம்பளம் வழங்கப்படாமல் இருந்தது. இதற்கு காரணம் மத்திய அரசாங்கத்தால் இந்தத் திட்டத்துக்கு வரவேண்டிய தவணைத்தொகை வரவில்லை.

இந்தத் திட்டம் ஒன்றிய அரசாங்க திட்டம் என்றாலும், தமிழக அரசின் பங்களிப்பும் அதில் இருக்கிறது. செலவை ஒன்றிய மாநில அரசுகள் 60:10 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. 2018ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டத்தில் இதுவரை எந்த பிரச்சினையும் இல்லாமல் இருந்தது. இதில் பணியாற்றும் பகுதிநேர ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.12,500 சம்பளமாக வழங்கப்பட்டு வந்தது.

ஒன்றிய அரசாங்கம் இந்த திட்டத்துக்கான நிதியை 4 தவணைகளாக ரூ.21.52 கோடியை வழங்க வேண்டும். அந்த வகையில், இந்த கல்வி ஆண்டுக்கான முதல் தவணை தொகை ரூ.373 கோடி, வழக்கமாக ஜூன் மாதத்திலேயே வந்துவிடும். ஆனால், இன்னும் வரவில்லை. இதற்கிடையில் 2வது தவணை தொகைக்கான காலமும் முடிந்து விட்டது. இதுமட்டுமல்லாமல், கடந்த நிதியாண்டுக் கான கடைசி தவணைத்தொகை ரூ.219 கோடியும் கொடுக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இதுவரை தமிழக அரசு தன் பங்குக்குரிய தொகையான ரூ.1,134 கோடியை வைத்து சம்பளம் மற்றும் மற்ற செலவுகளை சமாளித்துவந்தது. அதுவும் தீர்ந்து போனதால், செப்டம்பர் மாதத்துக்கான பகுதிநேர ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் போனது.

நிதி வழங்காததற்கு ஒன்றிய அரசாங்கம் கூறும் காரணம் விசித்திரமானது. பி.எம்.ஸ்ரீ பள்ளித்திட்டத்தில் தமிழக அரசு இணைவதாக கையெழுத்து போட்டால், உடனே நிதிவழங்கப்படும் என்று கூறுகிறது. பி.எம்.ஸ்ரீ திட்டத்தில் சேர்ந்தால் தேசியக்கல்வி கொள்கையை ஏற்றுக்கொண்டதுபோல ஆகிவிடும். இப்போது தமிழக அரசு தமிழ். ஆங்கிலம் என்ற இருமொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்தி வருகிறது. பி.எம். ஸ்ரீ திட்டத்தில் இணையும் நேரத்தில் தானாகவே மும்மொழிக்கல்வி கொள்கையையும் ஏற்றுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும் என்பதால் தமிழக அரசு இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்த நேரத்தில்கூட முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பி.எம்.ஸ்ரீ பள்ளித் திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பாக இறுதி முடிவு எட்டப்படும்வரை காத்திராமல். ஏற்கனவே சமக்ர சிக்சா திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகளுக்கான நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை ஏற்று உடனடியாக நிதியை ஒன்றிய அரசாங்கம் ஒதுக்கினால் தான், இந்த ஆசிரியர்களுக்கு சம்பளமும் கொடுக்க முடியும். கல்வி நலன் சார்ந்த சில திட்டங்களையும் நிறைவேற்றவும் முடியும் என்ற நிலை இருந்தது. இந்தநிலையில், ஆசிரியர்கள் மற்றும் அமைச்சு பணியாளர்கள் சம்பளம் கோரி போராட்டம் நடத்தினர். இந்த போராட்டத்தின் இறுதியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி, மாநில அரசின் நிதியில் இருந்து செப்டம்பர் மாதத்துக்கான சம்பளம் வழங்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி, செப்டம்பர் மாத சம்பளம் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அக்டோபர் மாத சம்பளமும் தீபாவளி பண்டிகையை கருத்தில் கொண்டு முன்கூட்டியே மாநில அரசு வழங்கியது. இதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தற்காலிக தீர்வு கிடைத்தாலும், மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தியும், ஒன்றிய அரசு இதுவரை நிதி ஒதுக்காதது கவலை அளிக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


தலையங்கம்
தினத்தந்தி
11.11.2024 (திங்கட் கிழமை)
மத்திய அரசாங்கம் தரவில்லை; தமிழக அரசு கொடுத்தது!